**எம்பிலிபிட்டிய பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபாய்.26,900,777 கூட்டுத் தொகையான சபைக்கு சொந்தமான 03 காணிகள், 07 கட்டிடங்கள் மற்றும் உழவு இயந்திரம் ஒன்று கணக்கு வைக்கப்பட்டிராததுடன் இடுகாட்டின் கிரயம் ரூபாய்.4,559,350 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிக்குரிய வார சந்தை கட்டணம் மற்றும் கடை அறைகளுக்கான கட்டணங்கள் ரூபாய்.129,287 தொகை வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | வியாபார கடன்கொடுத்தோர் ரூபாய்.36,950,406 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டில் ரூபாய்.9,486,036 ஆன மிகை மற்றும் ரூபாய்.27,464,380 ஆன பற்றாக்குறையாக மாறியிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இது திருத்தப்பட வேண்டும். |
| (ஈ) | கடன் பதிவேட்டின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ஊழியர் கடன் மீதியை | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வேறுபாட்டுக்கான காரணங்கள் |

| | | |
|---|---|---|
| விட ரூபாய்.651,190 அதிகரித்து நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | இனங்காணப் பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்குகளை தயாரிப்பதிலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபாய்.919,789,010 பெறுமதியான 66 பேரேட்டு பதிவுகள் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டிராததுடன் பேரேட்டு உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இது திருத்தப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

-

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபாய்.93,337 பெறுமதியான நிலையான வைப்புக்களுக்கான சான்றிதழ் ஒன்று கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | கிராம சபைகள் காலத்திலிருந்து முன்கொண்டு வரப்படும் இந்த நிலையான வைப்புக்களுக்குரிய வைப்புச் சான்றிதழ் ஒன்று இல்லை என்பது. | வங்கியில் வைப்புச் சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திம்பொல்கட்டிய வாரச் சந்தை காணி ரூபாய்.1,289,400 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதன் எழுத்து மூலமாக உரித்திணை போன்றே பௌதீக நிலவுகையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எழுத்து மூலமான உரித்து மற்றும் பௌதீக நிலவுகை உறுதிப்படுத்தப்படாமையினால் இந்த கணக்கு வைத்தல் திருத்தப்படும் என்பது. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு 07 அங்கத்தவர்களால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 1988 இன் 74 ஆம் இலக்க அதிகார சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றினை கையளிக்குமாறு அறிவு அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகாரச் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரச் சட்டத்திற்கமைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 26 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபாய்.1,269,079 கூட்டுத் தொகையான முற்பணங்கள் நிதிப் பிரமாணம் 371(5) பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கான அங்கீகாரத்திற்கு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 11 பிரதான விடயங்களுக்காக சபையினால் உபவிதி வகுக்கப்பட்டிருக்கவில்லை. | 19 உப விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 11 விடயங்களில் 04 விடயங்களுக்காக உப விதிகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளமை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,125,594 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,845,925 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,745,304 | 9,373,625 | 7,278,265 | 10,387,878 | 14,438,667 | 9,669,115 | 7,494,994 | 8,497,025 |
| வாடகை | 10,111,388 | 8,472,302 | 6,770,425 | 7,943,638 | 11,035,500 | 10,783,645 | 5,548,398 | 6,247,278 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,502,000 | 1,789,200 | 1,821,900 | 146,400 | 2,204,000 | 1,169,350 | 1,068,250 | 179,100 |
| ஏனைய வருமானங்கள் | 4,209,625 | 5,072,179 | 6,827,200 | - | 4,463,800 | 5,808,322 | 5,833,088 | 43,030 |
| | 25,568,317 | 24,707,30[illegible] | 22,697,790 | 18,477,916 | 32,141,967 | 27,430,432 | 19,944,730 | 14,966,433 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான ரூபாய்.9,492,588 தொகையான நிலுவை வீதவரி மீதியினுள் 05 வருடங்களை விட பழமையான ரூபாய். 1,336,099 ஆன மீதி ஒன்று நிலவியது. | 2023.02.28 ஆம் திகதியளவில் நிலுவையில் ரூபாய்.1,942,492 அறவிடப்பட்டுள்ளமை. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதார, பொது பயன்பாடுகள் சேவை மற்றும் பொது தெருக்கள் தொடர்பிலான விடயங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வகித்தல் மக்களின் நல்வாழ்வு மற்றும் நலன்புரி ஆகிய விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணி பொறுப்புகளை நிறைவேற்றல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் ரூபாய்.847,440 ஆன வாடகை வருமானம் ஈட்டப்பட்டிருந்த மோட்டார் கிரேடர், கலிபௌசர் மற்றும் பெக்கோ இயந்திரம் ஆகியவற்றை வாடகைக்கு வழங்கும் போது எந்த உத்தியோகத்தரினதும் மேற்பார்வை காணப்படவில்லை. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இல்லாதிருந்தமை காரணமாக அமைந்திருந்தது. தற்போது மோட்டார் கிரேடரை வாடகைக்கு வழங்கும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கண்காணிப்புடன் இடம்பெறுகின்றமை. | இதற்காக சிறந்த உள்ளக கட்டுப்பாடு ஒன்று காணப்பட வேண்டும். |
| (ஆ) | பெக்கோ இயந்திரத்தினை வாடகைக்கு வழங்குவதால் சந்திரிகா வெவ மாவட்ட மருத்துவமனையில் இருந்து அறவிடப்பட வேண்டிய 02 வருடங்களை விட பழமையான ரூபாய்.343,114 ஆன மீதி ஒன்று நிலவியது. | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணத்தை செலுத்துவதற்கு இணங்கியுள்ளமை. | சபைக்கு செலுத்த வேண்டிய வருமானங்கள் சேகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | களியாட்ட நிகழ்வின் போது அதன் உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் களியாட்ட வரி அறவிடப்பட்டிருந்தது. எனினும் களியாட்டத்தின் போது விற்பனையான உண்மையான நுழைவுச்சீட்டுக்களின் எண்ணிக்கையை சரியாக | அலுவலக விடுமுறை தினமொன்றில் இடம்பெற்ற விழா தொடர்பில் செயலாளருக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பிற்கமைய குறித்த பணி அவதானிக்கப்பட்டு அச்சந்தர்ப்பத்தில் விற்பனையாகி இருந்த | வருமானத்தின் சரியான தன்மையை இனங்காணுவதற்கு உரிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்துவதற்கு உரிய நடைமுறையொன்று சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நுழைவுச்சீட்டுகளின் எண்ணிக்கைக்கமைய கணிப்பிடப்பட்டு கட்டணம் அறவிடப்பட்டமை. | |
| (ஈ) | 03 நீர் செயல் திட்டங்களில் இருந்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபாய்.791,780 அறவிடப்பட்டிருந்நதுடன் அம்மீதியினுள் 01 வருடத்தினை விட பழமையான ரூபாய்.483,330 ஆன மீதி ஒன்று நிலவியது. | ரூபாய்.1,500 இற்கு மேற்பட்ட நிலுவைகளுக்கு சிவப்பு பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. நுகர்வோருடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சபைக்கு பெறவேண்டிய வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது சுமார் 1080 மெட்ரிக் தொன்கள் அளவான திண்மக் கழிவினை அகற்றுவதற்கு 09 ஊழியர்கள் மற்றும் 06 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபாய்.11,189,389 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த கழிவினை சூழலுக்கு இசைவான முறையில் அப்புறப்படுத்தி இருக்கவில்லை. | சூழலுக்கு இசைவான முறையில் கழிவை அகற்றுவதற்கு பொருத்தமான காணி ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | காணிகளை சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபாய்.76,451,331 தொகையான காணிகள், கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 10 மயானங்களில் 08 மயானங்களின் எல்லைகள் உரிய முறையில் இனங்காணப்பட்டிராததுடன் எஞ்சிய 34 மயான பூமிகளின் உரித்திணை பெற்றுக் கொள்வதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அந்த காணி அத்துமீறிய பயன்பாட்டிற்கு உள்ளாவதற்கான அச்சுறுத்தல் நிலவியது. | எஞ்சிய மயானங்களின் எல்லைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளமை. | சொத்துக்களின் உரித்து, நிலவுகை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபை பயன்படுத்தும் 03 ஏக்கர்கள் 02 ரூட்கள் 10 பேர்ச்கள் பரப்பளவான காணிகள் 07 மற்றும் பரப்பளவு அறியப்படாத துங்கம வாரச் சந்தை காணியின் உரித்திணை சுவீகரித்து கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்களின் உரித்து, நிலவுகை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத 04 வாகனங்கள் மற்றும் 02 இயந்திர உபகரணங்கள் கைத்தவிர்க்கப்பட்டிருக்கவில்லை. | இப்பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளமை. | 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முள்அடியாவள கல்லூரியின் விளையாட்டு திடலுக்கு பிரவேசிக்கும் வீதிக்கு இடப்பட்ட சுமார் 8,000 அச்சுக்கற்களுக்குரிய தரப்பரிசோதனை அறிக்கையினை பெற்றுக் கொள்ளாது ரூபாய்.364,800 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு கொன்கிரீட் குற்றிகளின் (Concrete Cubes) தரத்தினை பரிசோதனை செய்வதற்கு உரிய மாதிரியானது வீதியின் பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதிக்கு பின்னரான திகதியிலேயே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதனால் தரப்பரிசோதனை அறிக்கையின் செல்லுபடியான தன்மை பிரச்சனைக்குரியதாக இருந்தது. மேலும் நிறைவேற்றப்படாத பணிகளுக்காக ரூபாய்.26,304 செலுத்தப்பட்டிருந்தது. | 12 அச்சுக்கற்கள் மற்றும் 11 எனுமாறு 2 சந்தர்ப்பத்தில் பரிசோதனைகளில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும் இரண்டாவது பரிசோதனை அறிக்கை கோவைப்படுத்தப்பட்டிருக்கவில் லை என்பது, மற்றும் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை பிடிக்காசிலிருந்து மீள அறவிடப்படும் என்பது. | உரிய முறையில் தரப்பரிசோதனை அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்டவை மீள அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | கலககவெல மூன்றாவது குறுக்கு வீதியினை அபிவிருத்தி செய்யும் போது ஒரு வேலை விடயத்திற்காக ரூபாய்.15,777 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்த (Provisional Sum) ரூபாய்.78,286 இற்கான பட்டியல்கள் கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கிராமிய வீதி அபிவிருத்தி அமைச்சினாலேயே வீதங்கள் கணிப்பிடப்பட்டுள்ளன. அனைத்து பட்டியல்களும் கிராமிய வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளமையால் கோவையில் அந்த பட்டியல்கள் காணப்படவில்லை என்பது. | மேலதிகமாக செலுத்தப்பட்டவை அறவிடப்பட வேண்டியதுடன் உரிய தொழிலுக்குரிய அனைத்து பற்றுச் சீட்டுக்களின் பிரதிகளும் கோவைப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கும்பகொடஆற புபுது மாவத்தையில் இடப்பட்ட கொன்கிரீட்டின் தர பரிசோதனைக்காக ரூபாய்.30,856 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அறிக்கை கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. அதன் பெயர் பலகையினை நிறுவுவதற்கு ரூபாய்.10,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெயர் பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையின் பிரதி ஒன்று அமைச்சின் ஊடாக வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பெயர் பலகைக்கு செலுத்தப்பட்ட தொகை பிடிக்காசிலிருந்து அறவிடப்படும் என்பது. | தரப்பரிசோதனை அறிக்கையின் பிரதி ஒன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் நிறைவேற்றப்படாத பணிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள தொகையை மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |